# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

**OS .No.**42/2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | | திரு.முகமது அன்வர் | ஊர் | : | |
| த.பெ. | : | திரு. முகமது உசேன் | மாவட்டம் | : | |
| வயது | : | | தொழில் | : | |

2025ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 25-ஆம்நாள் **வா.சா. 1 ன்** வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54-வது விதியின் 95வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.D.சுரேந்தர் மொழிபெயர்ப்பாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

முதல் விசாரணை

சாட்சியத்தின் முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். இதில் உள்ள விபரங்கள் எல்லாம் நான் சொன்னவைதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். ராஜகோபால் மூப்பனார் எழுதி வைத்த செட்டில்மெண்ட் தாக்கல் செய்கிறேன். 20.9.1969 தேதியிட்ட ராஜகோபால் மூப்பனார் சொத்தை பொறுத்து கிரையம் பெற்ற சீனிவாச மூப்பனார் அந்த சொத்துக்களை மனைகளாக பிரித்து விற்பனை செய்ததில் எனது அப்பா 67வது மனையை விலைக்கு வாங்கினார் அந்த கிரைய பத்திரத்தின் சான்று நகல் தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.1** ஆகும். என் அப்பா இறந்தபிறகு வாரிசுகள் அனைவரும் எனக்கு மனை எண் 67இல் உள்ள அவர்களுடைய பாத்தியத்தை விடுதலை செய்து ஆவணம் எழுதி கொடுத்தார்கள் அந்த ஆவணத்தின் நகல் தாக்கல் செய்கிறேன். மனை எண் 67க்கு எனது அப்பா இறந்தபிறகு வாரிசுகள் அனைவர் பேரிலும் பட்டா ஏற்பட்டு அவர்கள் எனக்கு பாக பாத்திய விடுதலை ஆவணம் எழுதி கொடுத்த பிறகு என் பெயரால் பட்டா மாறுதல் ஏற்பட்டது அந்த பட்டா மாறுதல் உத்தரவு நகலும், என் பெயரில் உள்ள பட்டாவும் தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.2 வரிசை 2 தாள்கள்**ஆகும். எனது பெயரால் ஏற்பட்ட சொத்து வரி ரசீது அசல் தாக்கல் செய்கிறேன். ஏற்கனவே நகல் தாக்கல் செய்திரந்தேன் அது **வா.சா.ஆ.3**ஆகும். 1997 வது வருடம் தாவா சொத்தில் ஏற்பட்ட பிரச்சனைக்காக நான் மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு ஒரு புகார் அனுப்பினேன் அதன் நகலை தாக்கல் செய்கிறேன். 20.8.1999 தேதியில் தஞ்சாவூர் மருத்துவ கல்லூரி காவல்நிலையத்தில் நான் கொடுத்த புகார் நகல் தாக்கல்

செய்கிறேன். அந்த புகாருககு காவல் நிலையத்தார் கொடுத்த புகார் மனு ரசீது தாக்கல் செய்கிறேன். 12.2.2012 இல் தாவா சொத்து தொடர்பாக ஏற்பட்ட பிரச்சனைக்காக மருத்துவ கல்லூரி காவல்நிலையத்தில் நான் கொடுத்த புகார் தாக்கல் செய்கிறேன். அந்த புகாருக்கு மருத்துவ கல்லூரி காவல்நிலையத்தார் கொடுத்த ரசீது நகல் தாக்கல் செய்கிறேன். 1ஆம் பிரதிவாதி மனுதாரராக இருந்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்த முன்ஜாக்கிரதை மனுக்கள் 5 எண்ணிக்கை என்னால் பெறபட்டது அவைகளின் நகல்களை தாக்கல் செய்கிறேன். எனது அப்பாவின் இறப்பு சான்று நகல் தாக்கல் செய்கிறேன். எனது தந்தையாரின் வாரிசு சான்று நகல் தாக்கல் செய்கிறேன். அது **வா.சா.ஆ.4** ஆகும். எனது தாயாரின் இறப்பு சான்று நகல் தாக்கல் செய்கிறேன். அது **வா.சா.ஆ.5** ஆகும். எனது சகோதரி சல்மாஜான் இறந்துவிட்டார் அவரின் இறப்பு சான்று நகல் தாக்கல் செய்கிறேன். சல்மாஜான் வாரிசு சான்று நகல் தாக்கல் செய்கிறேன். மனை எண் 67ஐ காட்டக்கூடிய வரைபடம் தாக்கல் செய்கிறேன். தாவா சொத்தை பொறுத்து 1.1.1951 முதல் 31.12.1974 வரையிலான காலத்திற்குரிய வில்லங்க சான்று நகல் தாக்கல் செய்கிறேன். அது **வா.சா.ஆ.6** ஆகும். 26.9.1969 முதல் 29.7.1983 வரையிலான காலத்திற்குரிய வில்லங்க சான்று நகல் தாக்கல் செய்கிறேன். அது **வா.சா.ஆ.7** ஆகும். 16.7.2019 தேதியில் வழங்கபட்ட சொத்து வரி ரசீது நகல் தாக்கல் செய்கிறேன். 23.3.2017 தேதியில் வழங்கபட்ட சொத்து வரி ரசீது நகல் தாக்கல் செய்கிறேன். 1.6.1997 தேதியில் கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய சிட்டா தாக்கல் செய்கிறேன். அது **வா.சா.ஆ.8** ஆகும். 5.7.2019 தேதியில் கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய சிட்டா தாக்கல் செய்கிறேன். அது **வா.சா.ஆ.9** ஆகும். 19.11.2021 தேதியில் 1429, 1430, 1431 பசலிகளுக்கு செலுத்தபட்ட சொத்து வரி ரசீது அசல் தாக்கல் செய்கிறேன். அது **வா.சா.ஆ.10** ஆகும். 23.3.2017 தேதியில் கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய சிட்டா தாக்கல் செய்கிறேன். அது **வா.சா.ஆ.11** ஆகும். 7.11.2022 தேதியில் தஞ்சாவூர் மண்டல துணை வட்டாட்சியர் வழங்கிய பட்டா மாறுதல் உத்தரவு தாக்கல் செய்கிறேன். அது **வா.சா.ஆ.12** ஆகும். 2.1.2023 தேதியில் தஞ்சாவூர் மண்டல துணை வட்டாட்சியர் வழங்கிய நில பதிவேடு நகல் தாக்கல் செய்கிறேன். அது **வா.சா.ஆ.13** ஆகும். எனது தகப்பானாரின் இறப்பிற்கு பிறகு தாவா சொத்தை பொறுத்து பட்டா பெயர் மாற்றம் செய்து பிறப்பிக்கபட்ட உத்தரவு நகல் எங்களால் பெறபட்டது அதை தாக்கல் செய்கிறேன். அது **வா.சா.ஆ.14** ஆகும். தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

குறுக்குவிசாரணை வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

**நான் சொல்ல என் உத்திரவுப்படி**
**தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,**
**மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்**
**காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று**
**ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**(ஒம்/- ப .நாகராஜன்)**
**2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**தஞ்சாவூர்.**